விட்டுப் பிரியக்கூடாது என்று இருந்தோமே, அதுவே நமது நல்ல காலம் இல்லையா!'' என்று கூறிய சீதா புன்முறுவல் பூத்தாள்.

# கடந்த வருஷம்

பட்டாஸ் கடை எதிரில் வந்து நின்ற ஜகதீசன் தட்டுகளில் அடுக்கி வைத்திருந்த யானை வெடிகளைத் தயக்கத்துடன் பார்த்தான். ''இதோ பாருங்கள்! இந்த வருஷமும் வழக்கம்போல் யானை வெடிகள், பூனை வெடிகள் என்று வாங்கிக்கொண்டு வந்து கூத்தடித்தீர்களானால் எனக்குக் கெட்ட கோபம் வந்துவிடும். பட்டாஸ் வெடிச் சப்தம் கேட்டால் குழந்தை பயந்து கொண்டு அழுகிறான்'' என்று அவன் புறப்படு முன்பே சுசீலா போட்ட தடை உத்தரவு அவனது காதுகளில் ஒலித்துக் கொண்டே இருந்தது.

''கம்பி மத்தாப்பு இரண்டு டஜன் கொடு. போதும்'' என்று தன்வியாபாரத்தைப் பட்டாஸ்கடையில் சட்டென்று முடித்துக்கொண்டு பஸ் ஸ்டாண்டை நோக்கிச் சென்றான். மத்தாப்பு ஒளியைக் கண்டதும் முன்னிரண்டு அரிசிப் பற்கள் தெரிய வாயைத் திறந்து சிரித்துக் கொண்டு, சுருண்ட குழல்கற்றை நெற்றிமீது வந்து புரள, தலையை அசைத்து உற்சாகத்துடன் ஆர்ப்பரிக்கப் போகும் தன் அருமை மைந்தனை நினைத்துக்கொண்டான். அந்தக் கற்பனை அவனது உள்ளத்தை உவகையினால் பூரிக்கச் செய்தது.

''இந்தாரும், உம்மைத்தானே!'' என்று யாரோ கூட்டத்தில் தோளைத் தட்டி உரத்துக் கூவி அழைப்பதைக் கேட்டு அவன் திரும்பிப் பார்த்தான்.

''சௌக்கியமா? ஞாபகம் இருக்கிறதா?'' என்று வினவினார் எதிரே வந்து நின்ற அந்த வயோதிகர். அந்த

நரைத்த தலை, வெற்றிலைக் காவியேறிய பற்கள்-இவை களை எங்கேயோ கனவில் கண்டதுபோல், அவனது ஞாபகம் தெளிவற்ற மங்கிய நிலையில் இருந்தது.

''போன வருஷம் ஆஸ்பத்திரியில்...'' என்று ஆரம் பித்தார் அந்தப் பெரியவர். அவர் முடிக்கு முன் ஜகதீசன் செல்லவேண்டிய பஸ் வந்துவிட்டது. வீட்டிற்குத் திரும்ப வேண்டுமென்ற அவசரத்தில் பெரியவரைப் பார்த்துப் பதிலுக்குப் புரிந்துகொண்டதாகப் புன்முறுவல் செய்துவிட்டு அவன் உள்ளே பாய்ந்து ஏறிக்கொண்டான். ஆசனத்தில் நிம்மதியாகச் சாய்ந்துகொண்டதும் அவன் மனம் கடந்த வருஷத்திற்குச் சென்றுவிட்டது.

அன்று காலை அவன் ஆபீசிற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான். ''வரும்போதே நேற்றுப் பார்த்தசாரதி கடையில் நான் பார்த்து வைத்த அந்த நீலப்புடைவையை எடுத்துக்கொண்டு வந்துவிடுங்கள்! 'போனஸ்' கிடைத்தால் எனக்கு வாங்கித் தருவதாகச் சொல்லியிருக்கிறீர்கள்!'' என்று கொஞ்சலாக உத்தரவிட்டாள் சுசீலா. காலை முழுவதும் மறுநாள் பண்டிகைக்காகப் பட்சணங்கள் தயார் செய்வதில் மும்முரமாக ஈடுபட்டிருந்த அவள் அன்று மிகவும் களைப்பாகத் தென்பட்டாள். ''வீணாகச் சிரமப்படுத்திக் கொள்கிறாய்? தேவையான பட்சணங்களை ஹோட்டலிலிருந்து வாங்கிக்கொண் டிருக்கலாமே!'' என்று வாத்ஸல்யமாகக் கேட்டான் அவன்.

''பரவாயில்லை! வருஷத்திற்கு ஒருநாள் பண்டிகை வருகிறது. அன்றைக்குப் போய் ஹோட்டல் பட்சணம் எதற்கு? புடைவையை மறந்துவிட வேண்டாம்!'' என்றாள் அவள்.

''நூற்றைம்பது ரூபாய் விலை அல்லவா? அதையா வாங்கி வரச் சொல்கிறாய்? என் 'போனஸ்' முழுவதற்கும் செலவு வைத்துவிட்டாயே?'' என்று பரிகாசமாகக் கேட்ட ஜகதீசன் வெளியே புறப்பட்டான்.



''பிறகு உங்கள் இஷ்டம்?'' என்று புருவங்களை நெரித்தாள் சுசீலா.

''மாட்டேன் என்றால், அழுதே விடுவாய் போலிருக் கிறதே. அந்த நீலப் புடைவை மேல் அத்தனை மோகமா!'' என்று செல்லமாகக் கேட்டான் ஜகதீசன்.

''பிரியமிருந்தால் வாங்கி வாருங்கள். முடியாவிட்டால் அதற்காகப் போய் அழுவானேன்? அவ்வளவு முட்டாளா நான்?'' என்று கேட்ட அவள் பரிவுடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

அவளது அழகிய விழிகள் இரண்டிலும் பொங்கி நின்ற கனிவு அவனது மனத்தைத் தொட்டது. தாம்பத்ய வாழ்க்கையில் பதினான்கு வருஷங்களை அவனுடன் ஓட்டி விட்டாள் சுசீலா. அன்று வரை அது வேண்டும் இது வேண்டும் என்று அவள் கணவனை நிர்ப்பந்தப்படுத்தி எந்தப் பொருளையும் வாங்கிக்கொண்டவளே அல்ல. முப்பது ரூபாய் குமாஸ்தா உத்தியோகத்தில் இருந்ததனால் வறுமை காரணமாக அப்பொழுதெல்லாம் அவள் கேட்காதிருக்கலாம் என்றாலோ, இப்பொழுது அவன் முந்நூறு ரூபாய் சம்பாதிக்கும் உதவி மானேஜர் பதவியில் இருந்தான்; இப்பொழுதும் சுசீலா வாய்திறந்து தனக்குக் குறிப்பிட்ட ஒரு பொருள் வேண்டுமென்று கேட்டது கிடையாது. முதல்முதலாக அவள் நீலப்புடைவை வேண்டுமென்று ஆசைப்பட்டுக் கேட்கையில் அதை வாங்கிக் கொடுக்காமல் இருக்க அவனுக்கு மனமே இல்லை. மேலும் பல வருடங்களுக்குப் பிறகு சுசீலா முதல் முதலாகத் தாயாகப் போகும் நிலையில் இருந்தாள்.

திரும்பிவரும் அவசரத்தில் மறந்துவிடக்கூடாது என்று முன்கூட்டியே அன்றையப் பகல் ஓய்வு நேரத்தில் ஜகதீசன் ஜவுளிக் கடைக்குச் சென்றுவிட்டு வந்தான். ஆபீஸ் மேஜைக்குள்ளே புடைவைப் பொட்டலத்தை அடக்கப்படுத்திவிட்டுத் தன் வேலைகளைக் கவனிக்க லுற்றான்.

அன்றைச் சாயங்காலம், அவன் எதிர்பார்த்தது போல் ஆபீஸ் மூடியவுடன் அவன் வீட்டிற்குக் கிளம்பி விட முடியவில்லை. அடுத்த இரண்டு நாட்களும் விடுமுறை தினங்களாகி விட்டதனால், கம்பெனியின் சில முக்கியக் காகிதங்களை அன்றே பார்த்து முடித்துவிட்டால் அநுகூலமாக இருக்கும் என்று மானேஜர் கேட்டுக்கொண்டார். அவரது வார்த்தைகளை ஜகதீசனால் தட்ட முடியவில்லை. ஒரு வழியாக இரவு ஒன்பது மணிக்குத் தன் வேலையை முடித்துக்கொண்டு களைப்புடன் மேஜையை விட்டு எழுந்தான். அதே சமயம் ஆபீஸ் பையன் ஓடி வந்து, ''ஸார், உங்களை அவசரமாகயாரோ டெலிபோனில் கூப்பிடுறாங்க. வீட்டிலே அம்மாவுக்கு ஏதோ ஆபத்தாம்'' என்றான்.

'ஆபத்து!' என்ற வார்த்தையைக் கேட்ட ஜகதீசன் அரண்டு போய்விட்டான். மாடியிலிருந்த டெலிபோன் அறைக்கு இரண்டே தாவலில் ஓடினான். டெலிபோன் ரிஸீவரைக் கையில் எடுத்த அவனது கரம் பயத்தில் நடுங்கியது. பேசியது பக்கத்து வீட்டுப் பையன் என்று அறிந்துகொண்டான். அவன் சொன்ன முழு விஷயமும் ஜகதீசனின் காதில் ஏறவில்லை. ''சுசீலா ஆபத்தான நிலையில் இருக்கிறாள். டாக்டர் வந்திருக்கிறார். உடனே வரவும்'' என்பதுதான் அவன் கிரகித்துக் கொண்டதன் சாராம்சம்.

சுசீலாவுக்கு ஆபத்து. அபாயகரமான நிலைமை ஏற்படும்படி என்ன ஆபத்து? புடைவை வாங்கிவர வேண்டுமென்று காலையில் கேட்டபொழுது அவள் நன்றாகத் தானே இருந்தாள்? குழப்பமும் துக்கமும் தாளாது விழுந்துவிடுகிறவன் போல் தடுமாறிக் கொண்டு 'டாக்ஸி'யிலிருந்து இறங்கி வீட்டிற்குள் சென்றான். வாயிலில் அதற்குள் தெருவிலுள்ள பெண்கள் கூட்டம் ஒன்று



கூடியிருந்தது. உள்ளே அவனது வரவிற்குக் காத்திருந்தவர் போல் இருந்த டாக்டர், ''நீர்தான் இந்த அம்மாளின் கணவரா? சீக்கிரம் இவளைப் பிரசவ ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்ல வேண்டும். தாமதம் செய்தால் ஆபத்து. உடனே புறப்பட ஏற்பாடு செய்யும்'' என்று உத்தரவு பிறப்பித்துவிட்டுத் தமது பெட்டியை எடுத்துக்கொண்டு புறப்பட்டுவிட்டார்.

துயரத்தினாலும் பயத்தினாலும் குழம்பிப் போயிருந்த ஜகதீசன், துவண்டு ஸ்மரணையற்றவளாகக் கட்டிலின் மீது கிடந்த சுசீலாவை நெருங்கிப் பார்த்தான். அடுத்த வீட்டு அம்மாள் அவளது கால்களில் ஏதோ மருந்தைத் தடவித் தேய்த்துக்கொண்டிருந்தாள். ''சுசீலா! சுசீலா!'' என்று அவள் முகத்தின் அருகில் குனிந்து கூப்பிட்ட ஜகதீசனின் குரல் துக்கத்தில் அடைத்துக்கொண்டது. நீலப்புடைவை வேண்டுமென்று கொஞ்சிப் பேசிய அவனது அருமை சுசீலா, இப்போது க்ண்களைக் கூடத் திறந்து பாராது பிரேதம் போல் கிடந்தாள்.

''நீங்க வந்த டாக்ஸி வாசலிலே நிற்கிறதே, அதிலே ஆஸ்பத்திரிக்கு எடுத்துக்கொண்டு போகலாமே!'' என்று அண்டை வீட்டு அம்மாள் உபாயம் சொன்னதைக் கேட்ட பிறகுதான் அவனுக்கு உணர்வு ஏற்பட்டது. என்ன செய்தோம் ஏது செய்தோம் என்ற ஒரு நினைவும் இல்லாது, சுசீலாவின் உணர்வற்ற உடலை அணைதத் வண்ணம் ஆஸ்பத்திரியை அடைந்தான்.

''பெயர் சம்பளம் விலாசம்'' என்று நர்ஸ் கேட்ட கேள்விகளுக்கு யந்திரம் போல் பதில் அளித்தான் ஜகதீசன். மயக்கமாகக் கிடந்த சுசீலாவை அவர்கள் உள்ளே எடுத்துச் சென்றுவிட்டார்கள். ''நாங்கள் வந்து சொல்லும்வரை இங்கேயே இருங்கள்'' என்று நர்ஸ் ஒரு விஸ்தாரமான அறையைக் காட்டிவிட்டு மறைந்து விட்டாள்.

இருப்புக் கொள்ளாது அறைக்குள்ளே முன்னும் பின்னும் உலாவினான் அவன். அடிக்கொரு தடவை ஜன்னல் வழியே பித்தம் பிடித்தவன்போல் எட்டிப் பார்த்தான். வராந்தாவில் மெல்லிய பாதரக்ஷை ஓசை கேட்கும்பொழுதெல்லாம் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். விவரிக்க இயலாத ஒரு வேதனையில் துடித்துக் கொண்டிருந்த அவனுக்கு நிமிஷம் யுகமாகத் தென்பட்டது.

''டாக்டர் உங்களைப் பார்க்க வேண்டும் என்று அழைக்கிறார்!'' என்று ஒரு நர்ஸ் அவனிடம் வந்து கூறினாள்.

''ஆபரேஷன் செய்து குழந்தையை எடுக்கவேண்டும்; இல்லாவிட்டால் தாய்க்கும் குழந்தைக்கும் ஆபத்து. என்ன சொல்கிறீர்கள்?'' என்று வினவினார் டாக்டர் கண்டிப்பான குரலில்.

''ஆபரேஷன்!'' என்ற வார்த்தை அவனைத் திக்பிரமையடையச் செய்தது. ''இல்லாவிட்டால், டாக்டர்?'' என்று சிறு குழந்தையைப் போல் அர்த்தமற்ற ஒரு கேள்வியைக் கேட்டான்.

''இல்லாவிட்டால், குழந்தையும் தாயும் மரணமடைந்து விடுவார்கள். நீர் உத்தரவு கொடுத்தால்தான் நான் ஆபரேஷன் செய்யமுடியும். 'சம்மதம்' என்று சீக்கிரம் இந்தத் தாளில் கையெழுத்துப் போட்டுக் கொடும்'' என்று கூறிவிட்டு அவர் உள்ளே சென்றுவிட்டார்.

''ஆபரேஷன் என்றால் ஏன் இப்படிப் பயப்படுகிறீர்கள்? சீக்கிரம் நல்லதாகிவிடும்'' என்று தேறுதல் கூறிய நர்ஸ், ஒரு காகிதத்தை அவன் முன் நீட்டிப் புன்னகை செய்தாள். அவள் மொழி அவனுக்கு அது சமயம் ஆறுதலாக இருந்தது. பேனாவைக் கையில் எடுத்து அந்தக் காகிதத்தில் கையெழுத்துப் போடும் போது அவனது கரம் பயத்தினால் நடுங்கியது.



''என் மனைவியை ஒரு நிமிஷம் நான் பார்க்க முடியுமா? ஆபரேஷனுக்கு முன் ஒரு தடவை பார்க்க விரும்புகிறேன்'' என்று வினவினான் அவன்.

அநுதாபம் மேலோங்கிய அந்த நர்ஸ் அவனைப் பார்த்துத் தலையசைத்தாள். ''முடியாது. ஆனால் உங்களுக்காக நான் ஒரு சிறு உதவி செய்கிறேன். அங்கே தெரியும் வராந்தாவில் போய் நின்றுகொண்டிருங்கள். அதன் வழியாகத்தான் நோயாளியை ஆபரேஷன் அறைக்கு எடுத்துச் செல்வார்கள். டாக்டர் பார்ப்பதற்குள் மீண்டும் இங்கே சீக்கிரம் திரும்பி வந்துவிடுங்கள்'' என்று கூறிவிட்டு, அவள் வராந்தாவின் மறுகோடியை நோக்கி விரைந்து சென்றுவிட்டாள்.

இரவு மணி டண் டண் என்று பத்தடிக்கும் ஓசை பயங்கரமாகக் கேட்டது. வராந்தாவில் பாதரக்ஷையின் சப்தம் கேட்பதை அறிந்து ஆவலுடன் எட்டிப் பார்த்தான். ''உங்கள் மனைவியை ஆபரேஷனுக்கு எடுத்துச் செல்கிறார்கள். சீக்கிரம் அங்கே போங்கள்'' என்று அந்த நர்ஸ் ஓடிவந்து அவனுக்கு எச்சரிக்கை செய்தாள். சக்கரங்கள் கொண்ட கட்டில் ஒன்றில் சுசீலா கிடத்தப்பட்டிருந்தாள். அவள் உடல் முழுதும் மூடப்பட்டிருந்தது. அவளது நீண்ட கூந்தலைக்கூடத் துணியினால் மறைத்துக் கட்டியிருந்தார்கள். வராந்தாவில் மின்னிய விளக்கு ஒளியில் வட்ட வடிவமான அந்த அழகிய முகத்தை ஏக்கத்துடன் வெறித்துப் பார்த்தான் ஜகதீசன். ஆழ்ந்து நித்திரை செய்கிறவள் போல் சுசீலா கண்களை மூடிக்கொண்டிருந்தாள். நர்ஸின் உத்தரவுப்படியே சத்தமிடாது மீண்டும் அந்தப் பழைய அறைக்குள்ளே வந்து நின்று கொண்டான்.

வராந்தாவில் கிரீச்சென்று ஓலமிட்டுக் கொண்டு அந்தக் கட்டில் உருண்டு சென்றுகொண்டிருந்தது. சுசீலா அவனை விட்டு ஒவ்வொரு நிமிஷமும் பிரிந்து

சென்றுகொண் டிருக்கிறாள் என்று அந்த ஓலம் ஒரு
பயங்கர நினைவை அவனுக்கு ஏற்படுத்தியது. ஜன்னல்
வழியே வெளியே வெறித்துப் பார்க்க முயன்ற
அவனது கண்களை நீர் திரையிட்டுக் கொள்ளவே, கைக்
குட்டையை எடுத்து மெல்ல முகத்தைத் துடைத்துக்
கொண்டான். 'சுசீலா! எவ்வளவு அன்பான மனைவி!
அவளை இனித்திரும்ப உயிருடன் காணும் பாக்கியம் இருக்
கிறதா!' என்று தனக்குள்ளே பலவும் எண்ணியபடி
நின்ற அவனது சிந்தனை திடுக்கென்று கலைந்தது. 'ம்! ம்!'
என்று யாரோ விம்மி வாய்விட்டு அழும் சப்தம் கேட்டுத்
திகைப்புடன் திரும்பிப் பார்த்தான்.

அந்த அறைக்குள் ஜகதீசனைப் போலவே கவலை
யுடன் காத்துக்கொண்டு வேறு இருவர் உட்கார்ந்திருப்
பதை அப்பொழுதுதான் அவன் கவனித்தான். எதிர்ப்
புறத்து மூலையில் பெஞ்சுமீது உட்கார்ந்திருந்த ஒரு பெண்
மணியிடமிருந்துதான் அந்த விம்மல் ஒலி எழுந்துகொண்
டிருந்தது. வெகுநேரம் அழுதிருக்கிறாள் என்று அவளது
சிவந்து வீங்கிய முகம் தெரிவித்துக்கொண்டிருந்தது.

மற்றொரு மூலையில் சுவருடன் ஒட்டிக்கொண்டு
உட்கார்ந்திருந்தார் நரைத்த தலைக் கிழவனார் ஒருவர்.
துயரமே உருவெடுத்து வந்தாற்போல் அமர்ந்திருந்த
அவரிடமிருந்து அடிக்கொரு தடவை நிராசையானதொரு
பெருமூச்சு எழுந்து கொண்டிருந்தது. ஜன்னல் வழியே
வெளிப்புறம் தெரிந்த தெருவில், அவசரமாகப் பண்டி
கைக்குச் சாமான்களை வாங்கிக்கொண்டு செல்லும்
மக்களின் கூட்டம் இரவின் அந்த நேரத்தில்கூடக்
குறையவில்லை. அறையிலிருந்த அந்த மூன்று பேர்
களைத் தவிர அன்று இரவு நகரமே வரப்போகும் தீபா
வளியை மகிழ்ச்சியுடன் எதிர்பார்த்துக் கொண்டு
பண்டிகையின் கோலாகலத்தில் மூழ்கிக் கிடந்தது.

''மீனாக்ஷிக்குச் சொந்தக்காரங்க இருக்கிறாங்களா,



இங்கே?'' என்று உரத்த குரலில் அதட்டியபடி விசாரித்துக்
கொண்டு வந்து நின்றாள் ஒரு நர்ஸ்.

''ஏன் அம்மா?'' என்று ஏக காலத்தில் பதறியபடி
மூலையில் வீற்றிருந்த கிழவரும், அழுதுகொண்டிருந்த
அந்தப் பெண்மணியும் எழுந்து நின்றார்கள்.

''எட்டாம் நம்பர் வீடு, செங்கல்வராயன் தெரு,
மீனாக்ஷி சொந்தக்காரங்க நீங்கதானே அம்மா?'' என்று
நர்ஸ் மீண்டும் கேட்டதும், கிழவர் தொப்பென ஆசனத்தில்
உட்கார்ந்தார். ''மீனாக்ஷிசிக்கு உடம்பு ரொம்ப ஜாஸ்தி
யாக இருக்கிறது. போய், கிட்டக்க இருங்க'' என்று நர்ஸ்
கூறி முடிப்பதற்குள், ''ஐயோ மீனு!'' என்று அந்த
அம்மாள் கூக்குரலிட்டு அலறி அழத் தொடங்கிவிட்டாள்.
இரவின் நிச்சப்தத்தைக் கிழித்துக்கொண்டெழுந்த அந்த
ஓலம் ஜகதீசன் மனத்தை என்னவோ செய்தது.

மூலையில் உட்கார்ந்திருந்த பெரியவரும் ஈன ஸ்வரத்
தில், ''பாவம்! அந்த அம்மாளின் பெண் போலிருக்கிறது.
யாராயிருந்தால் என்ன? கஷ்டம் என்பது எல்லாருக்கும்
ஒன்றுதானே? தண்டபாணி புண்ணியத்தில் அந்தப்
பெண் ஆபத்திலிருந்து பிழைத்துக் கொள்ளட்டும்''
என்றார் இரக்கமாக.

தன் மனத்திலே அதே சமயம் அந்தப் பெண்ணிற்காக
எழுந்த அதே பிரார்த்தனையை அவர் வாய்விட்டுக்
கூறுவதைக் கேட்டு, ஆச்சரியத்துடன் ஜகதீசன் திரும்பிய
போது வராந்தாவில் பாதரட்சை ஓசை மீண்டும்
கேட்டது. ஆவலுடன் ஜகதீசன் ஓடி எட்டிப் பார்த்தான்.
அவனிடம் முதலில் பேசிய அதே நர்ஸ் ஏதோ காரியமாக
அந்தப் பக்கம் சென்று கொண்டிருந்தாள்.

''சித்த நில்லம்மா, நர்ஸ்! ஆபரேஷன் முடிய இன்னும்
எவ்வளவு நேரம் ஆகும்?'' என்று கவலையுடன் வினவி
னான் அவன்.

''அவசரப்படுகிறீர்களே. சற்று முன்னால்தானே

உள்ளே எடுத்துச் சென்றார்கள்? இன்னும் கொஞ்ச நேர மாகும்'' என்று கூறிவிட்டு அங்கிருந்து பறந்து சென்றாள்.

இரவு மணி பன்னிரண்டாகிக் கொண்டிருந்தது. இன்னும் கொஞ்ச நேரத்தை எப்படிப் போக்குவது என்று அவனுக்கு விளங்கவில்லை.

அருகிலிருந்த ஹோட்டலுக்காவது சென்று வந்தால் கொஞ்சம் பொழுது சீக்கிரம் கழியாதா என்று அவனுக்கு அலுப்பாகத் தோன்றியது. மூலையில் துயரமாக உட்கார்ந் திருந்த அந்தக் கிழவரைத் தனியே அங்கே விட்டுச் செல்ல அவனுக்கு ஏனோ மனம் வரவில்லை! ''ஐயா! உங்க ளைத்தானே, கொஞ்சம் காபி சாப்பிட்டு வருவோம், வரு கிறீர்களா?'' என்று அழைத்தான்.

''காபியா? எனக்கா? குழந்தை எமனுடன் போராடிக் கொண்டிருக்கிறாள். எனக்குக் காபி எப்படிச் செல்லும்? நேற்றுக் காலையிலே கொண்டுவந்து இங்கே விட்டது. இன்னும் ஒனறும் தெரியவில்லை. குழந்தையின் முகத்தை ஒரு தடவை பார்க்கவும் முடியவில்லை'' என்று துக்கத் துடன் அரற்றிய கிழவர், துண்டினால் கண்களைத் துடைத் துக்கொண்டார்.

''எல்லாம் சரியாகிவிடும். கவலைப் படாதீர்கள். சீக்கிரத்தில் சந்தோஷமான சமாசாரம் கேட்பீர்கள். ஏதா வது கொஞ்சம் சாப்பிடலாம், வாருங்கள்'' என்று தனது கவலைகளை மறந்து அவரை உபசரித்தான் அவன்.

''அப்பனே! என் குல தெய்வம் தண்டபாணியைப் போல வந்து நீ நல்ல வார்த்தை சொல்கிறாய். நீ க்ஷேம மாக இருக்கணும்'' என்று பெருமூச்செறிந்த கிழவர் தள்ளாடிக்கொண்டு எழுந்தார்.

ஜகதீசனுக்குப் பசியே இருக்கவில்லை. காபியைக் கூடச் சாப்பிட முடியாது அவனது நெஞ்சு கிலியில் காய்ந்து கிடந்தது. கிழவர் தமக்கு முன்னே ஆவிபொங்க வைக்கப்பட்டிருந்த காபியை வெறித்துப் பார்த்துக்



கொண்டிருந்தார். ''ஆறிப்போகுமுன் சாப்பிடுங்கள், ஐயா!'' என்று அவரை ஜகதீசன் உற்சாகப்படுத்தினான். கனவில் சஞ்சரிப்பவர்போல் அவர் பேசிக்கொண்டே சாப்பிட்டார்.

''ஆஸ்பத்திரி என்றாலே எனக்கு நடுக்கம், ஐயா! இந்தக் குழந்தை என்னுடைய மகள் வயிற்றுப் பேத்தி. எனக்கு இருப்பதெல்லாம் இவள் ஒருத்திதான். இவளு டைய தாயாரை இப்படித்தான் கொண்டுவந்து ஆஸ்பத் திரியிலே விட்டுவிட்டுக் காத்திருந்தேன். பிறகு அவளை நான் திரும்பப் பார்க்கவே இல்லே! அதனாலே ஆஸ்பத்தி ரின்னா...'' என்று கூறமுடியாது துக்கத்துடன் திணறினார். கடந்துபோன ஒரு துக்கச் சம்பவத்தின் நினைவினால் அவரது கண்களில் நீர் ஆறாகப் பெருகிக் கன்னங்களின் மீது வழிந்தோடியது.

பச்சாத்தாபத்துடன் ஜகதீசன் தலையைக் குனிந்து கொண்டு காபியை ஆற்றினான். ''இருபது வருஷங் களுக்கு முந்தி இருந்ததைவிட, சிகிச்சை முறைகளில் ஆஸ்பத்திரிகள் இப்பொழுது வெகுவாக முன்னேறி யிருக்கின்றன. பயப்படாதீர்கள்!'' என்று அவருக்குத் தேறுதல் கூறினான்.

கண்களைத் துடைத்துக் கொண்டே பெரியவர், ''ஏன் ஐயா, டாக்டர் கங்காதரன் ரொம்பக் கெட்டிக்காரரா? அவர்தான் என் பேத்தி கேஸைக் கவனிக்கிறாராம்!'' என்று விசாரித்தார்.

கங்காதரன் என்று ஒரு டாக்டர் அங்கே இருக்கிறார் என்பதுகூட ஜகதீசனுக்குத் தெரியாது. எனினும், பெரியவருக்கு உற்சாகமூட்டும் எண்ணத்துடன், ''ஓ தெரியுமே! ரொம்பக் கெட்டிக்காரர். என் நண்பன் மனைவிக்குக்கூட அவர்தான் சிகிச்சை செய்தார். நல்ல கைராசிகூட'' என்று தைரியம் கூறினான்.

''இதெல்லாம் ஒத்தருடைய கெட்டிக்காரத்தனத்தில் இல்லை, ஐயா! எல்லா டாக்டர்களுக்கும் மேலே அங்கே

இருக்கிறானே, என் அப்பன் தண்டபாணி, அந்த டாக்டர் மனசு வைக்கணும்'' என்று பெரியவர் கூரை முகட்டைச் சுட்டிக் காட்டிவிட்டு விரக்தியுடன் எழுந்தார்.

''ஏன் ஐயா! எங்கே போய்விட்டீர்கள்? உங்களை அரை மணியாகத் தேடுகிறேன்'' என்று எடுத்த எடுப்பி லேயே நர்ஸ் அவர்களைத் திரும்ப வரவேற்றாள்.

''என்னம்மா என்ன?'' என்று கிழவர் பதறினார் பதிலுக்கு. ஜகதீசன்கூட நர்ஸின் பதற்றத்தைக் கண்ணுற்றுப் பயந்து போய்விட்டான்.

''நல்ல விஷயந்தான்! உங்களுக்குப் பேரன் பிறந் திருக்கிறான். சத்தம் போடாமே அந்த அறைக்குப் போய் எட்டிப் பார்த்துவிட்டு நிம்மதியா வீட்டுக்குப் போய்த் தீபாவளி கொண்டாடுங்க!'' என்று கூறிய நர்ஸ் சிரித்துக் கொண்டே அப்பால் சென்றாள்.

''ஆண் குழந்தையா!'' என்று பல்லெல்லாம் தெரிய மகிழ்ச்சியுடன் கூறிய கிழவரைத் திரும்பிப் பார்த்தான் ஜகதீசன். சற்றுமுன் துயரத்தில் ஒடுங்கித் தள்ளாடிக் கொண்டிருந்த அவர் ஒரே கணத்தில் இருபது வயது வாலிப னைப் போல் வராந்தா மீது நிமிர்ந்து உற்சாகத்துடன் ஒரே மூச்சில் பேத்தியைப் பார்க்க ஓடிக்கொண்டிருந்தார். அவருக்கு ஏற்பட்ட அவசரத்தினாலும் ஆனந்தத்தினாலும் ஜகதீசனைப்பற்றியே அவர் மறந்துவிட்டார்!

இப்பொழுது ஜகதீசன் ஒருவன் மட்டுந்தான் தன் விஷயத்தை எதிர்பார்த்துக்கொண்டு காத்திருந்தான். தனிமையில் இரவில் அந்தக் கொஞ்ச நேரமும் அவனுக்கு முடிவில்லா ஒரு யுகம்போல் பாரமாகத் தோன்றியது. டணார் என்று அறையின் கடிகாரம் அடித்ததைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினான். வராந்தாவில் அவனைத் தேடிக் கொண்டு வருகிற நர்ஸின் பாதரக்ஷை ஓசை வெகு வேகமாகக் கேட்டது. ஜகதீசனது இருதயம் அதற்கு மேல் பன்மடங்கு வேகத்தில் அடித்துக்கொள்ள ஆரம்பித்தது.



''நீங்கள்தானே சுசீலாவின் கணவர்?'' என்று கேட்டாள், உள்ளே வந்த அந்தப் புதிய நர்ஸ்.

''ஆமாம்!'' என்று பதில் அளிப்பதற்குள் திகிலில் வார்த்தை தொண்டையில் நின்றுவிட்டது. என்ன சொல்லப் போகிறாளோ என்ற பயத்தில் உடல் முழுவதும் குப்பென்று வியர்த்துவிட்டது.

''ஆபரேஷன் முடிந்துவிட்டது; ஆண் குழந்தை பிறந் திருக்கிறது!'' என்றாள் அவள் புன்னகையுடன்.

''குழந்தை இருக்கட்டும். சுசீலா சங்கதி என்ன? அதை முதலில் சொல்!'' என்று கூக்குரலிட வேண்டும்போல் ஜகதீசனுக்கு அது சமயம் தோன்றியது. ஆனால் அதற்குப் பதில், ''என் மனைவி எப்படி இருக்கிறாள்?'' என்று ஹீனமான ஸ்வரத்தில் வினவினான்.

''ஓ! சௌக்கியமாக இருக்கிறாள்! உங்களுக்கு அவர் களைப் பார்க்க வேண்டுமல்லவா! என்னுடன் வாருங்கள்'' என்று அவள் முன்னால் வழிகாட்டிக்கொண்டு சென்றாள். படுக்கைமீது கொடிபோல் துவண்டு கிடந்த மனைவியின் முகத்தருகே குனிந்து, ''சுசீலா!'' என்று அன்புடன் அழைத்தான்.

''நீங்களா?'' என்று சுசீலா, அன்றைச் சம்பவத்திற்குப் பிறகு கண்களைத் திறந்து முதல் முதலாக வினவினாள். ''சுசீ!'' என்று மீண்டும் அன்புடன் அழைத்த அவனது கண்களை நீர் மறைத்துக்கொண்டது.

வெளியே தெருவில் உற்சாகத்துடன் பண்டிகையைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் சிறுவர்கள் கொளுத்திப் போட்ட பட்டாஸ் ஓசை காதைப் பிளந்து கொண் டிருந்தது. அன்று காலை அவ்வளவு துடிப்பிற்கும் கலக்கத் திற்கும் பிறகு நிம்மதியை அநுபவித்த அவன் உள்ளம் அது சமயம் அடைந்த ஆனந்தத்தைப் போல் அன்று நகரத்தில் யாருமே அநுபவித்திருக்க முடியாது.

வீட்டுக்குள் நுழைந்த ஜகதீசன் எதிரே வந்த சுசீலா விடமிருந்த தன் அருமை மைந்தனை வாங்கி மார்புறத் தழுவிக்கொண்டான். கடந்த வருஷம் தீபாவளி தினமா, இந்த வருஷம் தீபாவளி தினமா!— இதில் எது உயர்ந்தது என்று அவனால் கூற முடியவில்லை.

# வில் வண்டி

டாண் டாண் என்று ஒலித்த அந்தக் கடைசி மணி ஓசையைக் கேட்ட தங்கவேலன் புத்தகப் பையைத் தோளில் தூக்கிப் போட்டுக்கொண்டு பெஞ்சியை விட்டுத் துள்ளி எழுந்து நின்றான். ''அடேயப்பா, வகுப்பு முடிவ தற்குள் இத்தனை அவசரமா உனக்கு?'' என்று சித்திர உபாத்தியாயர் அவனைப் பார்த்துப் பரிகாசமாகக் கேட்ட தும், வகுப்பில் கலீர் என்று ஒரு நகைப்பு ஒலி எழுந்தது. 'கட்டை வண்டி மைனர்!' குப்பை வண்டி மைனர்!' என்று அட்டகாசமான சிறு குரல்கள் சிரிப்பொலியின் நடுவே கிரீச்சிட்டு ஒலித்தன.

''கட்டை வண்டி மைனர்! அது என்னடா புதுப் பெயர் தங்கவேலனுக்கு?'' என்று ஆச்சரியத்துடன் வினவிய உபாத்தியாயர் மேஜைமீது கிடந்த அங்கவஸ்திரத்தை உதறித் தோள்மீது போட்டுக்கொண்டார்.

''அதுதான் சார், நாங்க தங்கவேலனுக்கு வைத் திருக்கும் புதுப்பெயர். அவன் அப்பா கண்ணுசாமியிடம் ஒரு மொட்டை வண்டி இருக்கிறது. அதிலேதான் அவர் குப்பையை ஏற்றிக்கொண்டு நிலங்களுக்கு எருப்போடச் செல்வார். அதிலே இவனும் ஏறிக்கொண்டு சில சமயம் பள்ளிக்கூடம் வருவான். அதனாலே இவனுக்கு அந்தப் பேர் வைத்தோம்'' என்று சிரித்தான் பெரிய பண்ணையார் செல்வப் பேரன் கனகதுரை. அவன் ஏதோ பெரிய